**நுவரெலியா பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நுவரெலியா பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நுவரெலியா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான நிருவாகத்தினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை

அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 வேறு சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பான விசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் அறிக்கையின் 1.2.1 பிரிவின் (அ),(ஆ),(இ),(ஈ),(உ),(ஊ) மற்றும் (ஐ) பிரிவுகளின் அவதானிப்புக்கள் தவிர்ந்த முன்னைய ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா. 424,851 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா. 664,000 பெறுமதியான ஒரு இயந்திரம் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. அதே போன்று, ரூபா. 654,787 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த நீர்க்குழாய் உதிரிப்பாகங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2024 இற்கான நிதிக் கூற்றுக்களில் சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதியன்று ஆயர்வேத இருப்பு ரூபா. 190,363 இனால் கூடுதலாகவும் காகிதாதிகள் இருப்பு ரூபா. 696,770 இனால் குறைவாகவும் கணக்கிடப்பட்டிருந்தது. | 2024 இற்கான நிதிக்கூற்றுக்களில் சீர் செய்வதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டின் முத்திரை வரி வருமானம் ரூபா. 6,028,112 குறைவாக சிட்டையிடப்பட்டமை மீளாய்வாண்டில் சீர் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 இற்கான நிதிக்கூற்றுக்களில் சீர் செய்வதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2020 மற்றும் 2021 ஆண்டுகளில் பெறப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா. 498,375 இனால் காட்டப்பட்டிருந்ததுடன், 2024ஆம் ஆண்டு 23 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா. 736,242 பெறுமதியான செலவினங்கள் கடன் கொடுத்தோரில் கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | உபயோகப் பதிவேடுகளில் காட்டப்பட்டிருந்த வயர் இணைப்பற்ற 05 முனைகளின் பெறுமதி ரூபா. 5,250 இனால் குறைத்துக் கணக்கீழுடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வடிண்டின் இறுதித் தினத்தன்று நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த 06 கணக்குகளுடன் தொடர்பான மீதிகளை அதனுடன் தொடர்பான உப அட்டவணைகளில் குறிப்பிடப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடுகையில் ரூபா. 4,597,687 வித்தியாசம் காணப்பட்டது. | 2024 இற்கான நிதிக் கூற்றுக்களில் சீர் செய்வதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வடிண்டின் திசெம்பர் 31 அன்று நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா. 6,600,000 பெறுமதியான 04 சொத்துக்களுடன் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அவற்றை திருப்திகரமான முறையில் முனைப்பழிவு செய்ய முடியவில்லை. | 2024 இற்கான நிதிக்கூற்று தயாரிக்கப்படும் பொழுது வழங்கும் தகவல்களை சரியாக வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை இனங்காண்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சுபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) உப உறுப்புரைகள் | | | |
| 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் | பிரதேச சபையின் மூலம் 2020, 2021 மற்றும் முன்னைய ஆண்டின் செப்டம்பர் வரை கட்டணம் அறவிடப்பட்டிருந்த, ரூபா. | உப உறுப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | உப உறுப்புரை நியதிகளின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரசுரிக்கப்பட்ட 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற அனுமதிக்கப்பட்ட உப உறுப்புரையின் 01 ஆம் பிரிவு | 8,835,775 பெறுமதியான 68 விளம்பரப் பதாதை களுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| (இ) | 1988 மே 17 திகதியிடப்பட்ட 1988/22 இலக்க சுற்றறிக்கை | வீதவரி மற்றும் வரி அறவிடப்படும் பிரதேசங்களில் சொத்துக்களின் மதிப்பீடு 05 வருடங்களுக்கொரு முறையேனும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதும், சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் 2009 இன் பின்னர் வீதவரி மற்றும் வரி தொடர்பான சொத்துகளின் மதிப்பீடு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை | 2024 ஜனவரி முதல் வீதவரி மற்றும் வரி மதிப்பீட்டினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென | சுற்றறிக்கைன் அறிவுறுத்தலின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,001,479 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,234,153 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | வீதவரியும் வரியும் | 7,000,000 | 6,141,853 | 5,445,139 | 2,637,541 | 4,578,000 | 4,430,583 | 5,117,826 | 1,940,827 |
| (ii) | வாடகை | 11,191,931 | 7,195,579 | 6,971,707 | 1,244,039 | 6,547,916 | 85,865,475 | 86,330,192 | 1,020,167 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 6,125,000 | 9,446,332 | 9,446,332 | - | 2,767,000 | 2,301,478 | 2,301,478 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 24,864,750 | 34,468,867 | 7,370,485 | 33,840,110 | 58,700,821 | 15,086,522 | 12,365,771 | 6,741,728 |
| | மொத்தம் | 49,181,681 | 57,252,631 | 29,233,663 | 37,721,690 | 72,593,737 | 107,684,058 | 106,115,267 | 9,702,722 |

**2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

சபையின் வருமானம் சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் கீழ்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் வரி | | |
| | 2008 முதல் மீளாய்வாண்டின் நவம்பர் வரையிலான காலப்பகுதியினுள் தொடருந்துத் திணைக்களத்திலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா. 330,907 மற்றும் 05 வருடங்களாக இருந்து வருகின்ற, 59 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையாகிய ரூபா. 281,958 வீதவரி மற்றும் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | வருடத்திற்கான கொடுப்பனவுகள் தற்பொழுது செலுத்தப்பட்டு வருவதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| i. | 2018 முதல் அறவிடப்பட வேண்டிய வீட்டு வாடகை ரூபா. 80,187 அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை மூலம் நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படல் வேண்டும். |
| ii. | சபைக்குச் சொந்தமான கடைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ஒருதடவைக் கொடுப்பனவு ஒரே தடவையில் அறவிடப்படுவதற்குப் பதிலாக 05 வருடங்களில் அறவிடுவதற்கு சபை தீர்மாணித்ததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று 22 கடைகளிலிருந்து மொத்தமாக ரூபா. 10,680,620 அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒரு தடவைக் கொடுப்பனவை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | ஒரு தடவைக் கொடுப்பனவு அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | வேறு வருமானங்கள் | | |
| | 1987 இன் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 154 (1) பிரிவின் பிரகாரம் காணி ஏலவிற்பனை செய்த 02 நிறுவனங்களிடமிருந்து 20 காணிகளுக்கான விற்பனை விலையில் 01 வீத வரி தொகையாகிய ரூபா. 2,948,775 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்காக குறித்த நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானங்கள் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட 88 கட்டட வரைபடங்களுடன் தொடர்பான காணிகளின் உரிமை விண்ணப்பதாரருக்குச் சொந்தமான தென்பதை உறுதி செய்வதற்காக உறுதிப்பத்திரம் மற்றும் | எதிர்காலத்தில் பிரதான வீதி பெயர்த்தெடுப்புக் களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் சுகாதார பரிசோதகரை பங்குபெறச் செய்வதற்காக தேவையான | சட்ட ஏற்பாடுகள் கடைபிடிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பொது சுகாதார பரிசோதகரின் பரிந்துரை பெறப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதாக | |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குச் சொந்தமான கல் பிஹில்ல காணி, நீர்த் தாங்கியுடன் கூடிய காணி மற்றும் சபையின் மத்திய சிகிச்சை நிலையத்திற்கு அருகிலுள்ள பொது கழிவறை அமைந்துள்ள காணி ஆகியன வெளி நபர்களினால் சட்டவிரோத அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு வந்த போதும், அவர்களை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான வழிமுறையொன்றினை கூடிய விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சபைக்குச் சொந்தமான காணிகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) பழைய நானுஓயா காரியாலயத்தைச் சுழ அமைந்துள்ள நானுஓயா வீடமைப்புத் திட்டத்திலுள்ள 06 வீடுகள் வெளி நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | வாடகை உரிமையாளர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு இதனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சபைக்குச் சொந்தமான காணிகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) பிளக்பூல் வீடமைப்புத் திட்டத்தினுள் அமைந்துள்ள ஒரு வீடு மற்றும் சபைக்குச் சொந்தமான தலைமை இலிகிதர் அரச விடுதி ஆகியன குறை பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. | வருமானம் பெறக்கூடிய நிலையிலுள்ள ஒரு சொத்தினை பராமரித்து பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பெறுகை வழிகாட்டியின் 3.3 பிரிவிற்கு அமைவாக வரையறுக்கப்பட்ட விலைமனுக் கோரலின் போது வழங்குனர் பட்டியல் அடிப்படையில் விலைமனுக் கோரலை மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும், பதிவு செய்யாத வழங்குனர்களிடமிருந்து விலைமனுக் கோரப்பட்டு ரூபா. 524,743 பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | நடப்பாண்டு முதல் இதனை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | பெறுகை வழிகாட்டியின் அடிப்படையில் செயற்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) கொள்வனவு அறிவுரைப்பு வழிகாட்டியின் 5.3 16 (அ), (ஆ), (இ) பிரிவுகளுக்கு முறனாக சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதியகளுக்கு முறனாக ரூபா. 370,000 பெறுமதியான ஒரு கணினி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | 2024 முதல் பெறுகை வழிகாட்டியினைப் பின்பற்றி நாளது வரையாக்கப்பட்ட வகையில் விடயங்களை செயற்படுத்துவதாக | பெறுகை வழிகாட்டியின் அடிப்படையில் செயற்படல் வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஓய்வு பெற்ற, சேவை இடை நிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்கள் தொடர்பான ரூபா. 587,475 ஆன கடன் மீதி 02 வருட காலமாக அறவிடப்படாமல் இருந்தது. | நிலுவையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படல் வேண்டும். |